செ.வெ.எண்.80 நாள்: 30.08.2017

**திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், திருமலாபுரத்தில் நடைபெற்ற சிறப்பு மனுநீதி நாள் முகாமில் 103 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.**

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், திருமலாபுரம் சமுதாய நலக்கூடத்தில் வாசுதேவநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு.மனோகரன் அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் மனுநீதிநாள் இன்று (30.08.2017) நடைபெற்றது.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். மேலும், 103 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

மாவட்டத்தின் பிற பகுதிகளில் தொலைதூரத்தில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு வந்து தங்களது குறைகளை தெரிவிக்கும் சிரமத்தை தவிர்க்கும் வகையில், தொலைதூரப்பகுதிகளுக்காக மனுநீதிநாள் முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. இங்கு மனுநீதி நாள் நடைபெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே அரசு அலுவலர்கள் வந்திருந்து மனுக்களை பெற்றுள்ளனர். இப்பகுதியில் 168 மனுக்கள் பெறப்படுகிறது. 60 மனுக்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இன்று நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றது. 108 மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இன்று சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை வழங்குவதற்கான உத்தரவினையும், மாவட்ட வழங்கல் அலுவலகத்தின் சார்பாக 29 நபர்களுக்கு புதிய ஸ்மாட் கார்டு குடும்ப அட்டைகளையும், மாவட்ட நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் 5 நபர்களுக்கு விசைதெளிப்பான்களும், வருவாய்த்துறையின் மூலம் 26 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளும், தோட்டக்கலைத்துறையின் மூலம் 2 நபர்களுக்கும், வேளாண்மைத்துறையின் மூலம் 3 நபர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் பசுந்தீவனம், புல்கரணை மற்றும் கறவை மாடுகளுக்கான ஊட்டச்சத்து பாக்கெட்டுகள் 30 நபர்களுக்கும் என 103 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் இன்னும் 70 குடும்பங்களுக்கு வீடுகள் இல்லாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனு அளிக்கும் அனைவருக்கும் அரசு மானியத்தில் வீடுகள் கட்டிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இக்கிராமத்திலுள்ள 7 நபர்களுக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருக்க வேண்டும். டெங்கு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இக்கிராம மக்கள் அரசு அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

நமது மாவட்டம் இன்னும் 2 மாத காலத்திற்குள் திறந்த வெளி கழிப்பிடம் அற்ற மாவட்டமாக அறிவிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. கிராமப் பகுதிகளிலுள்ள 425 வீடுகளில் கழிப்பிடங்கள் இல்லாமல் உள்ளது. எனவே, அனைவரும் விண்ணப்பித்தால் போதும். வீடுகளில் கழிப்பிடம் கட்டித்தரப்படும். இந்த வாய்ப்பை சம்மந்தப்பட்ட அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இன்னும் 1 மாத காலத்திற்குள் இக்கிராமம் திறந்த வெளி கழிப்பிடம் அற்ற கிராமமாக திகழ்ந்திட வேண்டும். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின் மீது அரசு அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து தீர்வு காண வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சமுதாய நலக்கூட வளாகத்தில் மரக்கன்றுகளை நடவு செய்தார். தொடர்ந்து, அங்கு குடும்பநலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, சமூக நலத்துறை, குழந்தைகள் வளர்ச்சி திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மூலம் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சிகளை பார்வையிட்டார்.

இம்முகாமில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, தென்காசி கோட்டாட்சியர் திரு.ராஜேந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.நிர்மலா, இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.கனகராஜ், இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) இராஜேந்திரன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.முத்துலெட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (வேளாண்மை) திருமதி. சாந்திராணி, (சத்துணவு) திருமதி.பேச்சியம்மாள், மாவட்ட நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமை அலுவலர் திரு.செந்தில்வேல்முருகன், உதவி இயக்குநர் திரு.கஜேந்திரபாண்டியன், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் திரு.அருணாச்சலக்கனி, சிவகிரி வட்டாட்சியர் திருமதி.சாந்தி, சிவகிரி சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் திருமதி.அனிதா மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி